Nallur Branch Library

* தரமான வர்ணப் புகைப்படப் பிரதிகள்
* கம்பியூட்டர் முறையில்
* குறைந்த செலவில் பெற்றுக்கொள்ள
ஆர்த்தி ஜுவல்லர்ஸ் (பிறைவேட் லிமிட்டெட்)
111, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்
தொலைபேசி: 28628

Registered as a Newspaper

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை ரூ. 1/=

எதிர்கால இனிமைக் காட்சிகளை வர்ண புகைப்படத்திற் கற்றிடும், தரமான Sakura - Fuji - Kodak - Tudor வர்ணப் புகைப்படச் சுருள்களைப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்
ஆர்த்தி ஜுவல்லர்ஸ் (பிறைவேட் லிமிட்டெட்)
தொலைபேசி: 28628

சுடர்: 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு வைகாசி மீ 21 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1406 றம்ழான் பிறை 25 (04 06 1986) UTHAYAN- A LIVELY TAMIL DAILY சுதிர்: 169

# ஓடும் ரயிலில் தமிழர் வெட்டி, குத்திக் கொலை

## கல்லோயாவுக்கு அருகே குண்டர்கள் கைவரிசை

— உதயன் செய்தியாளர்: உதயசாரதி —

மட்டக்களப்பு ஜூன் 4

ஓடும் ரயிலில் தமிழ்ப் பயணிகள் வெட்டியும், குத்தியும் கொலை செய்யப்பட்டனர்.

மட்டக்களப்பில் இருந்து கொழும்பு சென்றுகொண்டிருந்த உதயதேவி ரயிலில் பயணம் செய்த தமிழர்களைத் தேடி, குண்டர்கள் கூட்டம் ஒன்று தாக்கியது

இச்சம்பவம் கல்லோயா அருகே உள்ள பழுகஸ்வேவவில் ஆரம்பித்து கெக்கிராவைவரை இடம்பெற்றது.

இந்த பயங்கரத் தாக்குதலில் ஆகக்குறைந்தது ஏழு தமிழர்கள் கொலையுண்டிருக்கலாம் என அஞ்சப்பட்டது. 20 பேர் வரை காயமடைந்தனர். அவர்கள் அனைவரும் தமிழ்ப் பயணிகளே.

நேற்று பிற்பகல் நடந்த இந்தப் பயங்கரச் சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது;

நேற்றுக் காலை 8-20 மணிக்கு உதயதேவி ரயில் மட்டக்களப்பு ரயில் நிலையத்தில் இருந்து கொழும்புநோக்கிப் புறப்பட்டது.

கல்லோயாச் சந்தியில் வைத்து திருமலையில் இருந்து வந்த ரயில்பெட்டிகள் உதயதேவியுடன் இணைக்கப்பட்டன.

கல்லோயாவில் பழுகஸ்வேவ ரயில் நிலையத்தை ரயில் பிற்பகல் 12-30 மணியளவில் அடைந்தது.

அங்கு இருந்து ரயில் புறப்படும்போது சாரமும் சேட்டும் அணிந்த சுமார் 25 குண்டர்கள் ரயிலில் ஏறிக்கொண்டனர்

அவர்கள் பொல்லுகள், கத்திகள், உடைந்த போத்தல்களுடன் காணப்பட்டனர்

ரயில் ஓடிக்கொண்டிருந்தசமயம் குண்டர் கோஷ்டி தமிழ்ப் பயணிகளைத் தேடிப் பிடித்துத் தாக்கத் தொடங்கியது. கெக்கிராவ ரயில் நிலையத்

(4ஆம் பக்கம் பார்க்க)

### குண்டு புரளியின் சிக்கல்

கொழும்பு, ஜூன் 4

கொழும்பில் உள்ள அரசு சார்பு பத்திரிகை நிறுவனம் ஒன்று வெளியூர்களில் மிஞ்சும் பத்திரிகைகளைப் பார்சலாகக் கட்டி கொழும்புக்கு அனுப்ப வேண்டாம் என்று தனது வெளியூர் ஏஜண்டுகளைக் கேட்டுள்ளது.

விற்பனையாகாத பத்திரிகைகளை அங்கேயே விற்றுவிட்டு பணத்தை அனுப்பி வைத்தால் போதும் என்றும் அறிவித்து உள்ளது.

எல்லாம் குண்டுப் புரளிப் பயம்தான் காரணம்' (உ-எ-21)

சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கும்

## 8 தமிழ் கைதிகளின் நிலை கவலைக்கிடம்

கொழும்பு, ஜூன் 4

வெலிக்கடையில் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கும் தமிழ் கைதிகளில் எட்டுப் பேரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரியவருகிறது.

இவர்கள் எட்டுப் பேரும் உண்ணாவிரதத்தில் குதித்து 11ஆவது நாளான நேற்று அரை மயக்கநிலையில் இருந்ததாகக் கூறப்படுகிறது.

இதே வேளை சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கும் கைதிகளின எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வரு

(4 ஆம் பக்கம் பார்க்க)

# திருமலை செல்வநாயகபுரத்தில் 10 தமிழரின் சடலங்கள் மலசல குழிகளுக்குள்!

## சூட்டுக் காயங்களுடன் கண்டு எடுக்கப்பட்டன

— உதயன் திருமலை மாவட்டச் செய்தியாளர் —

திருகோணமலை, ஜூன் 4

இரண்டு பெண்கள், பாடசாலை மாணவி ஒருத்தி உட்பட பத்துத் தமிழர்களின் சடலங்கள் மலசலகூட குழிகளுக்குள் கண்டு எடுக்கப்பட்டன!

அனைவரும் துப்பாக்கிச் சூட்டினால் உயிரிழந்திருப்பது தெரியவந்திருக்கிறது

திருகோணமலை நகரில் உள்ள செல்வநாயகபுரம் பகுதியில் (மூன்றும் கட்டைச் சந்தியில்) உள்ள இராணுவ முகாமுக்கு அருகில் உள்ள வளவுகளிலேயே சடலங்கள் கண்டு எடுக்கப்பட்டன.

கடந்த திங்கட்கிழமை மாலையில் நடைபெற்றதாகக் கூறப்படும் இப்பயங்கரச் சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது;-

செல்வநாயகபுரம் சந்தி மூன்றும் கட்டைச் சந்தி என்றும் அழைக்கப்படும்.

உப்புவெளிக் கிராமசபை எல்லைக்குள் இப்பகுதி வருகின்றது

அச்சந்தியில் சட்டத்தரணி க. பாலசிங்கம் என்பவரது வீட்டில் இராணுவ முகாம் ஒன்று உண்டு.

அந்த முகாமில் பகலில் தான் சிப்பாய்கள் இருப்பர். இரவு வேளையில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### நாகபூஷணி மகோற்சவம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 4

நயினை நாகபூஷணி அம்மன் கோவில் வருடாந்த மகோற்சவம் மறு அறிவித்தல் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இப்படி ஆலய அறங்காவலர் சபைச் செயாலளர் திரு.க. கனகசபாபதி அறிவித்திருக்கிறார்.

அடியார்களுக்கு ஏற்பட்டுள்ள பயண வசதியீனம் காரணமாகவே மகோற்சவம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ—எ)

## சிலிண்டர் குண்டுகளை சிப்பாய்கள் மீட்டனர்

### நாவற்குழியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூன் 4

போராளிகளினால் கண்டி வீதி மதகு ஒன்றில் வைக்கப்பட்டதாகக் கூறப்படும் மூன்று சிலிண்டர்களை நாவற்குழி இராணுவச் சிப்பாய்கள் நேற்று மீட்டனர்

இதனைத் தடுக்க போராளிகள் கைக்குண்டுகளை வீசியபோது நாவற்குழியில் இருந்து 'ஷெல்' தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதனால் ஒருவர் காயமடைந்தார், ஒரு வீடும் சேதமானது.

இந்தச் சம்பவத்தின்

(4ஆம் பக்கம் பார்க்க)

## செல்வநாயகபுரத்தில் கொலையுண்டவர் விவரம்

திருகோணமலை, ஜூன் 4

திருகோணமலை, செல்வநாயகபுரம் பயங்கரத்தில் இறந்தவர்களில் ஒருவர் கிராமசபை ஆயுள்வேத வைத்தியரான வை. தங்கக்கணபதி.

இன்னொருவர் திருமலையில் பிரபல தமிழ் எழுத்தாளராக விளங்கியவரும் திருமலை நகர சபை பொது நூல்நிலையத்தில் பணியாற்றியவருமான திரு. தி. அரியநாயகம். சம்பவம் நடந்த சமயம் திரு. அரிய

(4 ஆம் பக்கம் பார்க்க)



இக்கி இளை

என்ன சுருதி மாறுதோ, அல்லது கடைசிக்காலச் சுடலை ஞானம் பிறக்குதோ? வயது போகப் போக உந்த ஞானம் எல்லாருக்கும் வாறதுதான்!

### சுபநேரம்

4 — 06 — 1986

புதன்கிழமை

சுபநேரம்:

4·22 முதல் 5·52 வரை

ராகுகாலம்:

11 52முதல் 1.22 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

பிரதோஷ விரதம்

| நோன்பு | நேரம் |
|---|---|
| சஹார் | 4·18 |
| மக்ரிப் | 6 24 |

## குண்டுத் தாக்குதலை நிறுத்த ஈரோஸ் விதிக்கும் நிபந்தனை

புதுடில்லி, ஜூன் 3

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழர் கொலை செய்யப்படுவது நிறுத்தப்பட வேண்டும்; சிங்களக் குடியேற்றங்கள் அகற்றப்பட வேண்டும்; பாதுகாப்புப் படையினர் வாபஸ் வாங்கப்படவேண்டும்.

இப்படிச் செய்வதன் மூலம் தமிழ் பேசும் மக்கள் அமைதியாக வாழ வழிசெய்தால் குண்டுத் தாக்குதல்களை நாம் நிறுத்தி வைக்கத் தயார்.

இப்படி ஈரோஸ் இயக்கம் புதுடில்லியில் விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

எவ்வளவு பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கும் மத்தியில் வெற்றிகரமாகத் தாக்குதலை நடத்துவோம் என்பதை எமது அண்மைக்கால நடவடிக்கைகள் நிரூபித்துள்ளன.

இப்படி அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

(உ-எ-2)

# டிக்ஸிற் கொண்டு சென்ற ஜே. ஆரின் கடிதத்தை

## இந்திய உயர்குழு பரிசீலிக்கிறது

புதுடில்லி, ஜூன் 3

பிரதமர் ராஜீவ் காந்திக்கு ஜனாதிபதி ஜெயவர்த்தனா அனுப்பிய நீண்ட கடிதம் வெளியுறவு அமைச்சர் திரு பி. சிவ்சங்கர் தலைமையிலான குழுவினால் உன்னிப்பாகப் பரிசீலனை செய்யப்படுகின்றது.

இப்படி புதுடில்லியில் இருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

ஜெயவர்த்தனாவின் நீண்ட கடிதத்தை இந்தியத் தூதர் ஜே. என். டிக்ஸிற் வார இறுதியில் புதுடில்லிக்கு எடுத்துச் சென்றிருந்தார்.

கடந்த திங்கட்கிழமை பிரதமர் ராஜீவ் காந்தியை திரு டிக்ஸிற் சந்தித்து இனப்பிரச்சினைபற்

(4ஆம் பக்கம் பார்க்க)

## இணைப்புக் கோரிக்கையை கைவிட தமிழர் குழுக்களை நிர்ப்பந்திக்குக!

### இலங்கை அமைச்சர் குழு ராஜீவிடம் கேட்கும்

கொழும்பு, ஜூன் 4

வடக்கு - கிழக்கு இணைப்புக் கோரிக்கையைக் கைவிடும்படி தமிழர் அமைப்புக்களை நிர்ப்பந்தியுங்கள்.

இலங்கை அரசு விரைவில் அனுப்பவுள்ள அமைச்சர் தலைமையிலான குழு ஒன்று பிரதமர் ராஜீவ் காந்தியிடம் மேற்கண்டவாறு விண்ணப்பிக்க உள்ளது.

இப்படி, கொழும்பில் தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இனப் பிரச்சினை சம்பந்தமாக இந்தியாவுடன் தொடர்ந்து பேச்சுக்கள் நடத்த அமைச்சர் ஒருவர் தலைமையில் குழு ஒன்றை அனுப்ப இலங்கை அரசு முடிவு செய்து உள்ளதாகத் தெரிகிறது.

அக்குழுவில் இன்னொரு அமைச்சரும் இடம் பெறுகிறார்.

அந்தக் குழுவின் பிரதான நோக்கம், பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாண மக்களை கொன்று பிரச்சினைக்கு தீர்வுகாண முடியுமா?

## இல்லை என்கிறார் ஜனாதிபதி

கொழும்பு, ஜூன் 4

யாழ்ப்பாணத்துக்கு இராணுவத்தை அனுப்பி அங்குள்ள மக்களை எல்லாம் கொன்று தீர்வு காணவேண்டும் என்று கதிரையில் உட்கார்ந்து கொண்டு விமர்சிப்பவர்கள் நினைக்கின்றனர்.

இனப்பிரச்சினைக்கு அப்படித் தீர்வு கண்டுவிட முடியாது.

இவ்வாறு ஜனாதிபதி ஜெயவர்த்தனா அரசாங்க நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

இக்கூட்டம் நேற்று நடந்தது

திரு. ஜெயவர்த்தனா மேலும்சொன்னதாவது:

ஜனநாயகப் பாரம்பரியம் பேணப்படவேண்



ஜே. ஆர்

டும். ஜனாதிபதி பதவியை

நான் விட்டுவிட்டுப் போகும் நேரத்திலும் ஜனநாயக நாடு ஒன்றை விட்டுவிட்டே செல்லுவேன் அந்த எண்ணத்துடன்தான் நான் பணி புரிகின்றேன்.

கதிரையில் இருந்து கொண்டு விமர்சிக்கின்றவர்கள் என்ன மாதிரிப் பிரச்சினைக்குத் தீர்வு காண விரும்புகிறார்கள் என்பது எனக்குத் தெரிகின்றது

இராணுவத்தை யாழ். குடாவுக்கு அனுப்பி மக்களைக் கொன்று குவித்து தீர்வு காணமுடியாது.

பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் எவ்வளவு காலம் பொறுத்திருக்க முடியும் என்று மக்கள் கேட்கிறார்கள் நாமும் தீர்வுகாண இரவு, பக

(4ஆம் பக்கம் பார்க்க)

சந்நிதி ஆலயம்:

## தர்மகர்த்தாக்களுடன் சந்திப்பு திடீர் ரத்து

கொழும்பு, ஜூன் 4

செல்வச் சந்நிதி ஆலயத் தர்மகர்த்தாக்களுடன் நடத்த இருந்த சந்திப்பை ஜனாதிபதி ஜெயவர்த்தனா இறுதிநேரத்தில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் தமிழ் இளைஞர்கள் கைது

கொழும்பு, ஜூன் 4

கொழும்பு மாநகரில் பரவலாக தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

கொம்பனித் தெரு குளிர்பானத் தொழிற்சாலை குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக கன்னாகம் வாசி ஒருவர் கைது செய்யப்பட்டார். இவர் லொறி கிளீனராக தொழில் பார்த்து வந்தவர்.

இது சம்பந்தமாக கோட்டைப் பொலிஸார் 12 தமிழ் இளைஞர்களைக் கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

சவோய் படமாளிகையில் படம் பார்க்கச் சென்ற இரண்டு தமிழ் இளைஞர்கள் திங்கள் கைதானார்கள். ஒருவர் மட்டக்களப்புவாசி மற்றவர் யாழ்ப்பாணம்வாசி.

(உ-எ-2)

## நேற்றும் ஓய்வூதியம் வழங்கப்படவில்லை

யாழ்ப்பாணம், ஜூன் 4

யாழ்-தபாலக ஓய்வூதியக் கொடுப்பனவுகள் நேற்றும் கோட்டை வங்கிக் கிளையில் வழங்கப்படவில்லை

இதனால் நூற்றுக்கும் மேற்பட்ட முதியவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை போராளிகளினால் கவிழ்க்கப்பட்ட இராணுவ 'ட்ரக்' வண்டியை மீட்பதற்காக சிப்பாய்கள் கோட்டை முகாமை விட்டுவெளியே வரலாம் என்றும்—

அப்படி வெளியேறும் போது மேற்படி ஓய்வூதியம் பெற வருபவர்களை

(4 ஆம் பக்கம் பார்க்க)

### இளைஞர் சடலம் முகாமுக்கு வந்தது

மட்டக்களப்பு, ஜூன் 4

துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடனான இரண்டு இளைஞர்களின் சடலங்களை ஆயுதப்படையினர் கடந்த திங்கள் களுவாஞ்சிக்குடி முகாமுக்கு கொண்டு வந்து சேர்ப்பித்தனர். (உ-எ-21)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூர இட பஸ்சேவை நிறுத்தப்படும் அபாய நிலை

## டீசல் இல்லையாம்

யாழ்ப்பாணம், ஜூன் 4

தூர இடங்களுக்கான பஸ் சேவைகள் எந்நேரமும் நிறுத்தப்படக் கூடிய அபாயம் வட பகுதி பஸ் டிப்போக்களுக்கு ஏற்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

கடந்த காலங்களில் நாட்டில் ஏற்பட்டிருக்கும் பிரச்சினைகள் காரணமாக வட பகுதிக்கான டீசல் விநியோகம் தடைபட்டுள்ளதே இதற்கு காரணமாகும்.

இதனால் அனுராதபுரம் வவுனியா, மட்டக்களப்பு, மன்னார் போன்ற தூர இடங்களுக்கான பஸ் சேவைகள் எந்நேரமும் நிறுத்தப்படலாம்.

ஏற்கனவே சில உள்ளூர் பஸ் சேவைகளும் டீசல் தட்டுப்பாடுகாரணமாக நிறுத்தப்பட்டுள்ளன.

அனுராதபுரம் சென்று எரிபொருள் எடுத்து வருவதில் சிரமங்கள் ஏற்படுவதாலேயே வட பகுதிக்கான டீசல் விநியோகமும் குறைந்துள்ளது.

(இ-10)

## சுருவிலில் வீதி திருத்தம்

ஊர்காவற்றுறை ஜூன் 4

புளியங்கூடல் சான்யிலிருந்து சுருவிலூடாக ஊர்காவற்றுறை செல்லும் பிரதான பாதையில் திருத்த வேலைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனால் சுருவில், புளியங்கூடல் ஆகிய பகுதியிலுள்ள விவசாயிகள், மீனவர்கள் பெரிதும் பயன் அடைவர். (இ-16)

## படிவங்கள் பார்வைக்கு

கரவெட்டி, ஜூன் 4

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உணவு முத்திரை வழங்குவதற்காக தற்காலிகமாகத் தெரிவு செய்யப்பட்ட படிவங்கள் பூர்த்தி அடைந்துவிட்டன.

இப்படிவங்கள் கூட்டுறவு சங்கங்களிலும், கூட்டுறவு கிளைகளிலும் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

(இ - 70)

## தேசாந்திரம் புறப்பட்ட கலைஞன் கமலஹாசன்

இன்று இந்திய திரையுலகில் பல மொழிகளிலும் நடித்து புகழ் பெற்ற நடிகர் கமல்.

தமிழ், மலையாளம் தெலுங்கு, கன்னடம் இந்தி போன்ற பல மொழிகளிலும் வெற்றிக் கொடி நாட்டி சிறந்த படங்களைத் தந்தவர் கமல்.

தமிழ்ப்பட உலகை கமல் மறந்துவிட்டார் என்றுகூட ஒரு புகார் இருந்தது.

ஒரு சில மொழியினருக்குச் சொந்தமானவர் அல்ல கமல். சினிமா ரசிகர்கள் அனைவருக்குமே சொந்தமானவர் கமல்.

இதைப்பற்றி கமல் சொல்வதைப் பார்ப்போம்.

''எனது கேரள நண்பன் ஒருவன் எனக்குச் சொன்ன சில வாக்கியங்கள் என்னுள் ஓர் உண்மைக்கு விடிவானது''

கமல் நீ ஒரு தேசாந்திரம் புறப்பட்ட கலைஞன். இந்தியா முழுவதற்கும், மொழி இடைஞ்சல்கள் இல்லாமல் கேளிக்கை தரும் கலைஞன்.

நீ அத்தனை பேருக்கும் சொந்தம் உனக்கென்று ஓர் ஊர் இல்லை... வேர் இல்லை... இருக்கவும் கூடாது.

உனக்கென்று வசிக்க ஒரு இல்லம் விலாசம் என்றைக்கும் வரும் தெரியுமா?...

ஆடம்பரமில்லாமல் குமரிமுதல் இமயம் வரை கடைக்கால் எடுத்து, சிறிய குகை வீடுகட்டி முடித்த பிறகே... அதுவரை நீ நாடோடிதான்.. நண்பா, நாடோடி தான்...'' என்றார் நண்பர் முதலில் கேலியாக தெரிந்தாலும், பிறகு அவர் சொன்னதின் அர்த்தம் புரிந்தது.

தினசரி சினிமா

நான் மொழிக் கூட்டில் அடைபடாமல் தப்பிய கலைப்பறவை. மற்றப் பறவைகளை விட என் பறப்பு உயரமானது என்றும், ஆராய்ச்சியை விட அந்தப் பறவையின் அதிஷ்டவசமான சுதந்திரத்தைக் காப்பதும் கடமை.

ஆம். எனக்கு நாடெல்லாம் சரணாலயம். உலகெல்லாம் பறக்குமிடம்! என்றார்

## பருத்தித்துறை பிரஜைகள் குழு அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூன். 4

பருத்தித்துறை பிரஜைகள் குழுத் தலைவர் ஆயுத முனையில் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் குறித்து பிரஜைகள் குழு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

27.5.86 இல் பருத்தித்துறையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் விளக்கம்கேட்டும் தரப்படாத நிலையில், பொதுக் கூட்டத்தில் குழுமியிருந்த (இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட) மக்களால் வழங்கப்பெற்ற ஒருமித்த ஆணைப்படி 24.5.86 பத்திரிகைகளில் பருத்தித்துறையில் எட்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக வெளிவந்த செய்தியைக் கண்டித்து எம்மூலம் அறிக்கை வெளியிடப்பட்டதற்காக எமது தலைவர் 'புளொட்' இயக்கத்தினரால் 31.5.86 இரவு ஆயுத முனையில் பலவந்தமாக வீட்டிலிருந்து பலத்த எதிர்ப்பின் மத்தியில் கடத்திச் செல்லப்பட்டு அநாகரிக வார்த்தைகளால் தூற்றப்பட்டு பலவந்தமாக அறிக்கைபெற முயற்சி எடுக்கப்பட்டது.

செய்தி அறிந்த பருத்தித்துறைப் பொதுமக்கள் திரண்டு எமது தலைவரை ஆபத்திலிருந்து மீட்டுத் தரும்படி தமிழீழ விடுதலைப்புலிகளிடம் முறையிட்டதைத் தொடர்ந்து அவர்கள் துரித கதியில் செயற்பட்டு, எமது தலைவரை மீட்டுவந்து பருத்தித்துறையில் பாதுகாப்பான இடத்தில் விட்டுச் சென்றனர்.

எமது குழு எவரையும் சாராத-சுதந்திரமான குழு.

நாம் அனர்த்தம் ஏற்படாமல் இருப்பதற்காக மக்கள் ஆணையையே நிறைவேற்றினோம்.

ஜனநாயக வழிகளைத் தவிர்த்து, ஜனநாயக மரபுகளை மீறி, ஒரு ஜனநாயகக் கடமையைச் செய்ததற்காக அந்த அமைப்பின் தலைவரை ஆயுத முனையில் அனுகி அட்டகாசம் புரிந்து அவமானப் படுத்தியது கண்டிக்கத்தக்கது; வருந்தத்தக்கது.

ஆபத்தான நிலையில் தவிர்க்கமுடியாதசந்தர்ப்பத்தில் ஆயுதமுனையிலே மீட்பு வேலை நடத்த வேண்டி ஏற்பட்டுவிட்டது. இது ஒரு துர்ப்பாக்கிய நிலை என்றே கருதுகிறோம். எனினும் அனர்த்தம்எதுவும்நிகழாமல் இந்த வேண்டாத வெறுக்கத்தக்க நாடகம் முடிவுற்றதில் எல்லோருக்குமே ஒரு திருப்திதான்.

எனினும் மக்களையும் ஜனநாயகத்தையும் நேசிக்கும் எவரும் ஜனநாயக மரபுகளை மீறி மக்களுடனே மக்கள் ஜனநாயக அமைப்புகளுடனே ஆயுதமுனையில் முண்டி முரண்படுவதைத் தவிர்த்து ஜனநாயக ரீதியில் விளக்கம் தர முயலப்படுவதே நாகரிக உலகின் எதிர்பார்ப்பு.

இந்த நிலையிலிருந்து விலகிய சந்தர்ப்பங்கள் வேண்டாத அவலங்களையே தந்ததை மனித வரலாறு நமக்குக் கற்றுக் கொடுத்திருக்கும் உறைப்பான பாடமாகும்.

இந்த உண்மைகளை உணர்வுபூர்வமாக ஏற்று நிதானமாகச் சிந்தித்துச் செயற்பட்டு வருங்காலத்தில் இத்தகைய துர்ப்பாக்கியங்கள் நிகழாமல் தவிர்த்துக்கொள்ள அனைவரும் திடசங்கற்பம் பூணுவோமாக.

எங்கள் அதிகாரங்கள் மக்களால் தரப்பட்டவை வரம்புகள் மக்களால் வரையறை செய்யப்பட்டவை. மக்கள் சார்ந்த எந்தப்பிரச்சினையும் எமது அதிகார வரம்புக்கு உட்பட்டவையே. எமது இந்த அதிகார வரம்புகளை மீளாய்வு செய்யவோ குறுக்கவோ எவருக்கும் அதிகாரம் கிடையாது, இதில் தலையிட முற்படுவது அத்துமீறிய செயலாகும்.

—இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

# போதைவஸ்து பாவனை: 2 ஆயிரம் பேர் பாதிப்பு

## மாணவ மாணவியரும் அடிமைகள்

யாழ்ப்பாணம், ஜூன் 4

சமீபத்தில் எடுத்த புள்ளிவிவரப்படி தமிழ்ப் பகுதிகளில் சுமார் 2 ஆயிரம் பேர் போதை வஸ்து பாவனையால் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

இதில் பாடசாலை மாணவ, மாணவியரும் அடங்கியுள்ளனர். அதனால் இது குறித்து ஒவ்வொரு பெற்றோரும் நன்கு கவனத்தில் எடுக்க வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் "போதை வஸ்து ஓர் உயிர் கொல்லி இதிலிருந்து எம் இனத்தைப் பாதுகாப்போம்'' என்ற தலைப்பில் துண்டுப்பிரசுரம் ஒன்றை வெளியிட்டிருக்கிறது.

அந்தத் துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.;-

மனிதனின் வாழ்க்கை முறைகளில் மருத்துவத் துறை இன்றியமையாததாக உணரப்படுகிறது.

அதிலும் ஓர் விடுதலைப் போராட்டத்தில் ஒழுங்கமைவான மருத்துவ சிகிச்சையின் அவசியம் மிக அத்தியாவசியமானது. போராட்டத்தில் ஏற்படும் உயிரிழப்புகளை விட மேலதிக இரத்தப் பெருக்கால் அநாவசிய காரணங்களால் ஏற்படும் உயிரிழப்பே அதிகம்.

நெருக்கடிமிக்க இன்றைய சூழ்நிலையில் ஓர் கொடிய எதிரியிடம் இருந்து எம் மக்களைக் காக்க அரும்பாடுபட்டு வரும் இவ்வேளையில் எம்மை நாமே அழிக்கும் விதமாகப் போதை வஸ்து பாவனை தமிழ் பகுதி எங்கும் பெருகி வருகிறது.

எம் மக்களை ஆரோக்கியமற்றவர்களாக்கி படிப்படியாக அழிக்கும் நோக்குடனும் கூர்மையடைந்துள்ள விடுதலைப் போராட்டத்தை மழுங்கடிக்கும் விதமாகவும்சில ஏகாதிபத்திய சக்திகள் போதைவஸ்துகளை விநியோகித்து வருகின்றன.

போதைவஸ்துக்களாக அபின், கஞ்சா, ஹெரோயின், மர்சுவானு, L.S.D. போன்றனவும் மருத்துவ சிகிச்சைக்கு பாவிக்கப்படும் மருந்துப் பொருள்களும் போதை வஸ்தாக துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றது.

போதைவஸ்து ஆரம்பத்தில் அதிக உணர்வுகளைத் தூண்டி பிற்பட்ட நிலையில் அதேயளவு சோர்வு, சமுதாயத்தில் விரக்தி, உடலில் நடுக்கம், ஈற்றில் தன்னைத் தானே அழிக்கும் மனோ நிலையைத் தோற்றுவிக்கும்.

இதனால் பாதிக்கப்பட்டோர் உடனடியாக வைத்தியரை நாடி தகுந்த சிகிச்சை பெறாவிடின் மரணத்தைத் தவிர்க்க முடியாது.

கடந்த ஒருவாரத்தில் மட்டும் 13 பேர் வரை யாழ் வைத்தியசாலையில் இதன் பாவனையால் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

எனவே உயிர்க்கொல்லியாகவும் எம்சமுதாயத்தைச் சீரழிப்பதுமான போதைவஸ்துப் பாவனையை உடன் நிறுத்துவோம்.

அத்துடன் போதை வஸ்து தமிழ் பகுதியில் விற்பனை செய்வது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. மீறி எப்பகுதியிலாவது போதைவஸ்து விற்பனை செய்தால் அவர்கள் மீது அல்லது எம் மக்கள் மத்தியில் இதன் பாவனையைப் புகுத்துவோர் மீது மிகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென எச்சரிக்கின்றோம்.

இப்படி அந்த பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(உ)

## கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம்

### பேசாலையில் மீனவர் காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 4

பேசாலைக் கடலில் இறால், மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் மீது கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்

இதனால் ஐந்து பேர் காயமடைந்தனர்

மூன்று படகுகளைக் கைப்பற்றி அதில் இருந்த மீனவர்களைக் கடற்படையினர் கைதுசெய்து கொண்டு சென்றதாகத் தெரியவருகிறது.

சம்பவம்பற்றி அறிய வருவதாவது;-

ஞாயிறு இரவு 7 மணி அளவில் பேசாலைக் கடலில் பதினைந்திற்கும் மேற்பட்ட படகுகளில் மீனவர்கள் மீன் பிடித்துக் கொண்டிருந்தனர்.

அப்பொழுது கவசப் படகுகளில் வந்த கடற்படையினர் இம் மீன்பிடி வள்ளங்களைச் சுற்றி வளைத்து வள்ளங்களில் இருந்த மீன்களையும் இறால்களையும் பறிமுதல் செய்தனர்.

பின்னர் மீனவர்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகமும் செய்தனர். இதனால் ஐந்துபேர் காயமடைந்தனர்,

சில மீன்பிடிப் படகுகளும் சேதமடைந்தன.

அத்தோடு மூன்று படகுகளைக் கைப்பற்றி அதில் இருந்த ஒன்பது மீனவர்களை கடற்படையினர் கைது செய்து கொண்டு சென்றனர் என்று தெரியவருகிறது.

சம்பவத்தில் காயமடைந்த செபஸ்தியன் மஸ்கிரின் (20 வயது) என்ற இளைஞன் யாழ், வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

(இ-10)

## குண்டு எப்போது வைக்கப்பட்டது?

கொழும்பு, ஜூன் 4

வியாங்கொடையில் வெடித்த குண்டு, மட்டக்களப்பில் தான் ரயிலில் வைக்கப்பட்டது

இப்படி சந்தேகிக்கப்படுவதாக பொலீஸ் மா அதிபர் சிறில் ஹேரத் சொன்னார்.

தீவிரவாதிகள் தென் இலங்கையில் செயல்படத் தொடங்கியுள்ளனர்.

இதனால் தென் இலங்கையில் சில பகுதிகளைச் சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்த வேண்டியேற்பட்டுள்ளது. பொது மக்களின் ஒத்துழைப்பு இதற்குத் தேவைப்படுகிறது.

நாட்டின் 350 பொலிஸ் நிலையங்களும் அதி உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன

இப்படி பொலீஸ் மா அதிபர் சிறில் ஹெரத் சொன்னார் (இ-எ)

## பம்பாய் வெங்காய விதை

அராலி பம்பாய் வெங்காய உற்பத்தியாளர் சங்கத்தின் முயற்சியால் இறக்குமதி செய்யப்பட்ட விதை விவசாய அதிகாரிகளால் உத்தரவாதம் செய்யப்பட்டது. விஞ்ஞான முறைப்படி களஞ்சியப்படுத்தப்பட்டது, வெளிவந்த பயிர் திறமையாகவுள்ளது. சிறிய அளவு விதை கையிருப்பிலுள்ளது.

பெறுமிடம்.

ஸ்ரீமகள் ரேடர்ஸ்

58, ஆஸ்பத்திரி வீதி, (பெரிய கடை) யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 23572

# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

## தமிழனிடமுள்ள நிரந்தர சொத்து: கல்வி

### அதனை அழிக்கமுடியாது என்கிறார் கல்விப்பணிப்பாளர்

மானிப்பாய், ஜூன் 4.

தமிழினம் இன்று அரசியல், பொருளாதார நிலைகளில் பல இழப்புகளை அனுபவித்து வருகின்றது. பொருளாதாரம் அழிக்கப்பட்டாலும் எவராலும் அழிக்கமுடியாத ஒரு நிரந்தர சொத்து தமிழினத்திடம் உண்டு. அதுதான் கல்வி.

இணுவில் சைவப்பிரகாச மகா வித்தியாசாலை ஆசிரியர், மாணவர்கள் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர் ஆகியோர் இணைந்து நடத்திய பாராட்டு விழாவுக்கு பதிலுரை வழங்கி உரையாற்றிய யாழ்ப்பாணம் கல்வி பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

இப்பாராட்டு விழாவுக்கு மேற்படி வித்தியாசாலை அதிபர் திரு எஸ். எம். மூர்த்தி தலைமை வகித்தார்.

திரு. ஞா. கேதீஸ்வரன் வரவேற்புரை வழங்கினார்.

கல்விப் பணிப்பாளருக்கு பாடசாலை சார்பாகவும் அபிவிருத்திச் சபை சார்பாகவும் பாராட்டுப் பத்திரங்கள் வாசித்து வழங்கப்பட்டன.

பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் பண்டிதர் திரு. நா. இராசையா தமது பாராட்டுரையில், சகல வசதிகளும் தகுதிகளும் கொண்ட இப்பாடசாலையில் ஜி. சி. ஈ. உயர்தர வகுப்புக்களை ஆரம்பிக்க நடவடிக்கைகள் எடுக்குமாறு கல்விப் பணிப்பாளரைக் கேட்டுக்கொண்டார்.

திரு. ச. வே. பஞ்சாட்சரம் தமது பாராட்டுரையில் யாழ்ப்பாணத்தில் கல்விப்பணிப்பாளராக இதுவரை காலத்தில் கடமையாற்றியோரில், கலை, விஞ்ஞானம், நடனம், இசை போன்ற துறைகளில் பட்டம் பெற்ற இன்றைய கல்விப் பணிப்பாளரே அப்பதவிக்கு மிகவும் பொருத்தமானவர் எனக் குறிப்பிட்டார்.

சைவசமய பாட வட்டாரக் கல்வி அதிகாரி திரு. எஸ். மகேசன், இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் திரு. வே. சி. சிவபால சிங்கம், வங்கி அலுவலர் திரு. ஆ. ரகுபதி பால சிறீதரன் உட்பட பலரும் கல்விப்பணிப்பாளரைப் பாராட்டிப் பேசினர்

(இ-90)

## இராணுவ விசாரணை

கொழும்பு ஜூன் 4

மூதூர் பச்சனூர்க் கிராமத்தில் நிலக்கண்ணி வெடித் தாக்குதலில் சிப்பாய்கள் இறந்த சம்பவம் பற்றி விசாரணை செய்ய இராணுவ விசாரணைக்குழு ஒன்று நியமிக்கப்பட உள்ளது.

இக்குழுவின் விசாரணையில் வெளியாகும் சாட்சியங்களைப் பொறுத்து இராணுவ நீதிமன்ற விசாரணை ஒன்றுக்கு உத்தரவிடப்படும்.

இப்படி பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (உ எ)

## பூநகரியில மடம் சேதம்

பூநகரி, ஜூன் 4

பூநகரி ஞானி மடத்தில் உள்ள மடம் ஒன்று சிருடையினரால் சேதப்படுத்தப்பட்டுள்ளது.

முற்காலத்தில் நாயன்மார் குருபூசைகளும், அன்னதானம் முதலியனவும் இடம்பெறும் முக்கிய மடமாக இது இருந்து வந்தது.

இதைச் சீருடையினர் உடைத்து ஓடுகளைப் போட்டுவிட்டு கூரை கோப்பிச மரங்கள் முழுவதையும் எடுத்துச் சென்றுவிட்டனராம்.

(இ - 124)

## மண்டைதீவு மக்கள் அதிருப்தி

மண்டைதீவு ஜூன் 4

மண்டைதீவு பகுதியில் வறுமை நிவாரண விண்ணப்பப் படிவங்கள் தெரிவு செய்யப்பட்ட குழுவினால் முறையாக சிபார்சு செய்யப்படாதது குறித்து இப்பகுதி மக்கள் அதிருப்தி அடைந்துள்ளார்கள்.

முன்பு உணவுமுத்திரைகள் கிடைக்கப் பெற்றவர்களுக்குக் கூட இம்முறை இத்தெரிவுக்குழுவால் ரத்துசெய்யப்பட்டதாகவும் சிலருக்கு குறைக்கப்பட்டதாகவும், புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதியவர்கள் பலருக்கு சிபார்சு செய்யப்பட்டதாகவும் குறை கூறப்படுகின்றது.

இதுதொடர்பாக மண்டைதீவு தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. க. குலசிங்கநாதன் தெரிவுக் குழுவினால் சிபார்சு செய்யப்பட்ட விண்ணப்ப படிவங்கள் முழுவதையும் மீளாய்வு செய்யுமாறு தீவுப்பகுதி உதவி அரசாங்க அதிபர் செல்வி. மைதிலி. சோமசுந்தரத்தைக் கோரியுள்ளார்.

(இ ஒ 143)

## தமிழ் படத்தில் வந்த தாக்குதற் காட்சி

### தணிக்கையானது

கொழும்பு, ஜூன். 4

கொழும்பில் திரையிடப்பட்டுள்ள 'சுகமான ராகங்கள் தமிழ்ப் படத்தில் வந்த பொலீஸ் தாக்குதல் காட்சியை இலங்கைத் தணிக்கைச் சபை அப்படியே வெட்டி விட்டது.

தென் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட இப் படத்தில் பொலீஸ் நிலையம் ஒன்றைத்தாக்கும் காட்சி தத்ரூபமாக எடுக்கப்பட்டிருந்தது.

தாக்குதலின் போது பொலீஸ் நிலையம் தரைமட்டமாக்கப்பட்டதாக படத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது.

பிரதி பொலீஸ்மா அதிபரும் இப்படத்தை பார்வையிட தணிக்கைசபையால் அழைக்கப்பட்டிருந்தார்.

தற்போது போராளிகள் பொலீஸ் நிலையங்களைத் தாக்குவது மாதிரி அக்காட்சி அமைந்திருந்தது என்று தணிக்கைச் சபைத்தலைவர் டி. எச் அபயசிங்க சொன்னார்.

படத்தைப் பார்த்த பிரதிபொலீஸ்மா அதிபரும் அக்காட்சி பொது மக்கள் பார்வையிடுவதற்கு உகந்தது அல்ல என்று கூறினார்.

வெட்டப்பட்ட அந்தத் துண்டை சமர்ப்பிக்கும் படி வெளியீட்டாளருக்கு தணிக்கைச்சபை உத்தரவிட்டிருந்தது.

(உ-எ)

## அராலி பிரஜைகள் குழு மகஜர்

வட்டுக்கோட்டை ஜூன் 4

கடந்த 29ம் திகதி அராலித்துறையில் ஹெலிக்கொப்டரிலிருந்து சுட்டதுபோல் அராலிப் பகுதியில் வானத் தாக்குதல் நடைபெறாத வகையில் நடவடிக்கை எடுக்குமாறு அராலி பிரஜைகள் குழு, தமிழ்ப் பிரதேச பிரஜைகள் இணைப்புக் குழுவையும் அரசாங்க அதிபரையும் கேட்டுள்ளது. (161)

## திருமலையில் தாக்குதல்

### முறியடிக்கப்பட்டுவிட்டதாக பாதுகாப்பு அமைச்சு கூறுகிறது

திருகோணமலை, ஜூன் 4

சனிக்கிழமை இரவு திருகோணமலையில் தீவிரவாதிகள் இரண்டு தாக்குதல்களை மேற்கொண்டனர் என்றும் அவற்றைப் பாதுகாப்புப் படைகள் முறியடித்து விட்டன என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இரவு 11 மணி அளவில் ஆண்டாங்குளம் நீர் விநியோகத் திட்டப் பகுதி மீது தீவிரவாதிகள் தாக்குதலை மேற்கொண்டனராம்.

[illegible] இருப்புக் கூட்டத்தில் தீவிரவாதிகள் [illegible] நடிவிட்டன ராம்.

இதுபோன்று மிஹிந்துபுரப் பகுதியிலும் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் முறியடிக்கப்பட்டதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் [illegible]

(இ - எ - 150)

## தேவை

திருநெல்வேலிச் சந்தியில் பலசரக்குக் கடை ஒன்றுக்குக்கூடிய முதலீடு செய்யக்கூடிய பங்காளர் ஒருவர் தேவை. 10-6-86க்கு முன்பு விண்ணப்பிக்கவும்; விளம்பர இலக்கம்: 20, மே./பா. 'உதயன்', 15, 2ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

## தேவை

பெண்கள் காசாளர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம். அண்மையிலுள்ளவர்கள் விரும்பத்தக்கது. ஸ்ருடியோ நித்ய சித்ரா, சங்கானை.

## கல்வி

பாலர் ஆசிரியர் பயிற்சி நெறி-1986

தபால் சேவையில்லாத காரணத்தினால் விண்ணப்ப முடிவு திகதி நீடிக்கப்பட்டுள்ளது. க. பொ. த. (சா/த) குறைந்த தகைமை. பெண்கள் விண்ணப்பிக்கலாம். குடாநாட்டுக்கு வெளியில் வசிப்போரும் சனி, ஞாயிறு தினங்களில் வரமுடியாதோரும் தபால் வழியும் பயிலலாம். பாலர் ஆசிரியர் சங்கம், 42, பிரப்பங்குளம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

இலட்சியப்பற்றுள்ள ஒருவன் ஆயிரம் தவறுகளை விடுவானுல் இலட்சியமே இல்லாதவன் ஐம்பதினுயிரம் தவறுகளை விடுவான். ஆகவே இலட்சியம் ஒன்றை ஒவ்வொருவரும் வைத்துக்கொள்ளவேண்டும்.

—சுவாமி விவேகானந்தர்


உதயன்

உண்மை — அஞ்சாமை — நடுநிலைமை

இல. 16 கேகு ஒழுங்கை, பின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 04-06-86 தொலைபேசி 24805, 22073 த. பெ 28


# சர்வகட்சி மாநாடு மீண்டும் எதற்கு?

இனப்பிரச்சினை சம்பந்தமாக மீண்டும் சர்வகட்சி மாநாடு நடக்கப் போகிறது! ஆளுங்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு இதற்கான முடிவை மேற்கொண்டிருக்கிறது.

இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் நாட்டின் மிகப்பெரிய அரசியல் பிரச்சினையாக விளங்குவது தமிழ் மக்களின் உரிமைப் பிரச்சினை. அவர்களின் சுதந்திரப் பிரச்சினை என்றுகூடச் சொல்லலாம். அது இனப்பிரச்சினைஎன்றே பிரசித்தமாக அழைக்கப்படுகிறது.

இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்ற இதய சுத்தியுடன் எந்தச் சிங்கள அரசியல் கட்சியும் இதுவரை செயற்படவில்லை. அதனை மையமாக வைத்துத் தாம் அரசியல் இலாபம் தேடவும் பதவிக்கு வரவுமே பாடுபட்டன.

பல சந்தர்ப்பங்களில் இனக்கலவரங்களை ஆளுங்கட்சிகளும் எதிரணிக் கட்சிகளும் திட்டமிட்டுச் செய்வித்ததும் உண்டு. அவை பழைய கதை.

1983 கறுப்பு ஜூலைக்குப் பின்னர் இனப்பிரச்சினை வெளிஉலகுக்கும் தெரிந்த விவகாரமாகியது. அதன் பின்னரே தமிழர் பிரச்சினையை தீர்க்க வேண்டும் என்ற எண்ணம் சிறிதளவாகவேனும் இப்போதைய அரசாங்கத்துக்கு வந்தது எனலாம்.

அப்போதைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியின் முயற்சியினுலும் தூண்டுதலினுலும், 1984 முற்பகுதியில் சர்வ கட்சி மாநாடு ஒன்று நடத்தப்பட்டது ஆனல் அது பயனற்ற, நேரங்கழிக்கும்—காலம் கடத்தும் காரியமாக முடிந்ததே அன்றி எந்தவித பலாபலனும் கிடைக்கவில்லை.

அதன் பின்னர் இதுவரையான ஒன்றரை வருடங்களில் எத்தனையோ சந்திப்புகள், பேச்சுக்கள், மாநாடுகள், அறிக்கைகள், திட்டங்கள், திட்டங்களுக்குத் திருத்தங்கள், யோசனைகள், யோசனைகளுக்கு புதியயோசனைகள் என்று ஏதேதோ எல்லாம் நடந்தன. விளைவோ பூச்சியம்தான்.

இந்தியாவின் முயற்சிகளும் பலனளிக்கவில்லை. அரசியல் தீர்வு என்றுகூறி இராணுவ வழியை இலங்கை நாடுவதை இந்தியாவும் உணர்ந்து கொண்டுவெளிப்படையாகக்கூறும் அளவுக்கு நிலைமை தலைகீழாகிவிட்டது.

உரிமை இழந்து நிற்கும் தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் விதத்திலான தீர்வுஎதையும் இலங்கை அரசுஇன்னும் முன்வைக்கவில்லை. ஆகக் கடைசியாக கொழும்பு வந்த சிதம்பரம் தூதுக்குழுவினர் வெளியிட்ட கருத்து இதனைப் புலப்படுத்துகிறது.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் இந்திய—இலங்கை தொடர்பில் பெரிய விரிசலும் தேக்க நிலையும் ஏற்பட்டிருக்கிறது.

அத்தோடு தமிழ் அரசியல் கட்சிகளோ அல்லது தமிழர் அமைப்புகளோ பேச்சுவார்த்தை, மாநாடு எதற்கும் தயாராக இல்லாத நிலையும் உருவாகிஇருக்கிறது.

வடக்கு, கிழக்கில் இராணுவத்தைக் குவித்து, நாளாந்தம் அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்படுகிருர்கள் அந்த நிலை மாறும்வரை — இராணுவம் வாபஸ் செய்யப்படும்வரை தமிழர் கட்சிகள், அமைப்புகள் எதுவும் பேச்சு வார்த்தைக்குப் போவதில்லை என்று முடிவு செய்திருக்கின்றன.

இத்தகைய சூழ்நிலையில் மீண்டும் ஒரு சர்வகட்சி மாநாடு நடக்கப் போகிறதாம்! கொழும்பில் - தென்னிலங்கையில் அடிக்கடி நடந்துவரும் குண்டு வெடிப்புச் சம்பவங்களே இந்த மாநாட்டுக்குத் தூண்டுதலாக இருக்கலாம்.

இனப்பிரச்சினையைத் தீர்க்க அரசு உத்தேசிக்கும் திட்டத்தை ஏனைய அரசியல் கட்சிகளுக்கு எடுத்துக் கூறுவது. அதற்காக ஆதரவை திரட்டுவது. இவை இரண்டுமே மாநாட்டின் பிரதான நோக்கங்கள் எனத் தெரியவருகிறது.

எனவே இதனைத் தென்னிலங்கைச் சர்வ கட்சி மாநாடு என்று சொல்வதே பொருத்தமானது.

இந்த மாநாட்டிலிருந்து தமிழர் பிரச்சினையைத் தீர்க்க ஆக்கபூர்வமான எந்தப் பலனும் கிடைக்கும் என்று எதிர்பார்ப்பதற்கு இல்லை.

இது வெளி உலகத்தை ஏய்க்காட்டுவதற்கு விரிக்கப்படும் மறைப்புப் போர்வை. குறிப்பாக இந்தியாவைப் பார்த்து "எங்கள் அலுவலை நாமே பார்க்கிருேம். நீர் உமது அலுவலைப் பாரும்" என்று சொல்வதற்கான போர்வை. வேறு ஒன்றுமல்ல.

## ஹிரோஷிமாவில் பேச்சு நடத்த கோரிக்கை

ஹிரோஷிமா, ஜூன் 3

அணுகுண்டினுல் அழிக்கப்பட்ட ஹிரோஷிமா நகரில் அணு ஆயுதக் குறைப்புப் பற்றியபேச்சுக்களை நடத்துக!

அமெரிக்க அதிபர் றேகனுக்கும் சோவியத் அதிபர் கோர்பச்சேவுக்கும் இப்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## ஜப்பான் சீனுஒப்பந்தம்

பீகிங், ஜூன் 3

ஜப்பான் நாட்டிலிருந்து சீனுவிற்குச் சென்ற தூது கோஷ்டியொன்று பல ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டது.

உயர்தரகைத்தொழில் வர்த்தக அதிகாரிகளைக் கொண்ட இத் தூது கோஷ்டி சீனுவில் நான்கு நாட்கள் தங்கியிருந்தது.

ஜப்பானின் உதவியை அதிகரிக்க வேண்டுமென சீன அதிகாரிகள் விடுத்த வேண்டுகோள் ஏற்கப்பட்டது. (உ-ஓ)

# ஆப்கானியர் அயல் நாடுகளுக்கு குடி பெயரக் கூடாது

## நாட்டைக் கட்டிஎழுப்ப உதவுமாறு மலைஜாதி மக்களைக் கேட்கிருர் நஜிமுல்லா

காபூல் ஜூன்-3

ஆப்கானிஸ்தானிலிருந்து வேறு நாடுகளுக்கு குடிபெயரும் மலைஜாதி கிராம மக்களை அவ்வாறு செல்ல வேண்டாம் என ஆப்கான் தலைவர் நஜிமுல்லா கேட்டுக்கொண்டுள்ளார்.

காபூலில் மலைஜாதி மக்கள் தலைவர்களிடையே உரையாற்றும்போதே அவ்வாறு அவர் கேட்டுக்கொண்டார்.

மலைஜாதி மக்கள் துன்புறுத்தப்படுகிருர்கள் என்ற குற்றச்சாட்டுக்கு ஆப்கான் முன்னுள் தலைவர் அபு ஹஸால் அலீம் தான் பொறுப்பு என்ருர் அவர்

மலைஜாதியினர் அண்டை நாடுகளுக்குச் செல்வதை தடுத்து நிறுத்தி புதிய ஆப்கானிஸ்தானைக் கட்டி எழுப்புவதற்கு ஒத்துழைக்குமாறு தலைவர்களை மேலும் கேட்டுக்கொண்டார்.

## பாலஸ்தீன அகதிமுகாம் சண்டைகளை நிறுத்த தலையிடுமாறு

### அரபுநாடுகளை அரபாத் கோருகிருர்

ரியூனிஸ், ஜூன். 3

லெபனுனில் பாலஸ்தீனிய அகதி முகாம்களைச் சுற்றிலும் நடக்கும் சண்டையை நிறுத்த அயல் அரபு நாடுகளைத் தலையிடுமாறு பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் அரபாத் கோரியுள்ளார்.

ரியூனிஸ் நகரில் செய்தியாளர்களிடம் பேசும்போதே அரபாத் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

பெய்றூட்டில் தெற்குப்புற நகர்பகுதி முகாம்களை ஷிய-அமல் படை முற்றுகையிட்டுள்ளதாகவும் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்தார்.

இதனிடையே சனிக்கிழமை அன்று சண்டை நிறுத்தத்துக்கு ஒப்புக் கொள்ளப்பட்டது. எனினும் முகாம்களைச் சுற்றி மீண்டும் சண்டை நடந்து கொண்டிருக்கிறது என செய்திகள் கூறுகின்றன. (ஐ)

## தெ. கொரியாவில் சந்திப்பு

சியால் ஜூன் 3

தென் கொரிய அதிபர் சாங் அங்குள்ள பிரதான எதிர்க்கட்சியின் தலைவரைச் சந்திக்க இணங்கி உள்ளார்.

எதிர்வரும் வியாழக்கிழமை இந்தச் சந்திப்பு இடம்பெறும்.

ஜனநாயக சீர்திருத்தம் தொடர்பான விடயங்கள் விவாதிக்கப்படலாம் என நம்பப்படுகிறது.

பஞ்சாப்

## பி.ஜே.பி. தலைவர் விபத்தில் மரணம்

சண்டிகார், ஜூன். 3

பஞ்சாப் சட்டப் பேரவையின் பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர் மதன்மோகன் காரியா விபத்தில் இறந்து விட்டார்.

சண்டிகார் சட்ட சபையின் விசேட கூட்டத்துக்கு சென்று விட்டு திரும்பிக் கொண்டிருந்த போதே அவரின் கார் விபத்துக்குள்ளானது.

லொறியொன்றுடன் இவரது கார் மோதியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு. காரியாவுடன் சென்ற மெய்காப்பாளர் கடுமையான காயங்களுக்கு உள்ளடங்கியதாகவும் இராணுவ வைத்தியசாலையில் உடனடியாகச் சேர்க்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

## டில்லியில் மிஸோதலைவர் லால் டெங்கா

புதுடில்லி ஜூன் 3

மிசோரம் தேசிய முன்னணித் தலைவர் லால் டெங்கா பாரத உள்துறை இணை அமைச்சர் ராம்நிவாஸ் மிர்தாவைச் சந்தித்து ஒரு மணி நேரம் பேச்சுக்கள் நடத்திஞர்.

பேச்சுக்கள் சுமுகநிலையில் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெளி உலகில்

# ஐ. நா. ஆலோசனையை இஸ்ரவேல் நிராகரிப்பு

## தென் லெபனுனிலிருந்து படை விலகல் முடியாது என்கிருர் ஷாமீர்

பெய்றூட், ஜூன். 3

ஐக்கிய நாடுகள் சபையின் ஆலோசனைப்படி தென் லெபனுனிலிருந்து இஸ்ரவேல் துருப்புகள் வாபஸாக முடியாது.

இவ்வாறு இஸ்ரவேல் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் எச். ஆர். ஷாமீர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் விசேட தூதுவர் ரேஜ் டிங்குக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவித்த போது;

"சர்வதேச அமைதி காக்கும் படையிடமும் தென் லெபனுன் கட்டுப்பாட்டைக் கையளித்து விட முடியாது.

தென் லெபனுன் இராணுவம் என அழைக்கப்படும் கிறிஸ்தவ படைகள் அங்கிருந்து வெளியேறுவதைப்பொறுத்தே) எமது படைவிலகலும் நடைமுறையாகும்" என தெரிவித்தார். (ஐ

# சிதம்பரம் குழுவிடம் இலங்கை தெரிவித்த யோசனைகள் என்ன?

## 'புரொன்ட்லைன்' கட்டுரையில் விளக்கம்

அமைச்சர் சாகுல் ஹமீது புதுடில்லி சென்ற பின்னர் இணை அமைச்சர் சிதம்பரம் தலைமையிலான குழு கொழும்பு வந்தது. சிதம்பரம் குழுவிடம் இலங்கை அரசு அளித்த பிந்திய யோசனைகள், அதுபற்றிய தமிழர் அமைப்புகளின் நிலை—இவை பற்றி 'ப்ரொண்ட் லைன்' (மே 17—30) சஞ்சிகையில் கட்டுரை ஒன்றில் விளக்கப்பட்டுள்ளது. அதன் தமிழாக்கம் இங்கு பிரசுரிக்கப்படுகிறது. கட்டுரையை எழுதியவர் [illegible] பார்த்தசாரதி

இந்தியாவின் யூனியன் பிரதேச அமைப்புக்கு உட்பட்ட முறையில் 'இணைப்பு — சி' அடிப்படையில் அதிகாரப்பரவலாக்கல் திட்டத்தை அமுல் நடத்துவதுபற்றிய யோசனையைத்தான் இலங்கை வெளிவிவகார அமைச்சர் சாஹுல் ஹமீது புதுடில்லி கொண்டு சென்ருர்.

இந்த யோசனை போதாது என்று புதுடில்லியில் வைத்து அவருக்கு உணர்த்தப்பட்டது.

'இணைப்பு — சி' திட்டத்தில் குறிப்பிடப்பட்ட முக்கிய நோக்கங்களை மையமாக வைத்து இந்தியா புதிய அடிப்படைத் திட்டம் ஒன்றைத் தயாரித்து இருந்தது.

இதற்கு அமைவாக கொழும்பு சமர்ப்பித்து இருந்த யூனியன் பிரதேச மாதிரியான அமைப்பு இருக்கவில்லை என்ற காரணத்தினுல், புதுடில்லிப் பேச்சுக்களின் பின்னர் அது கைவிடப்பட்டது.

இதைத் தொடர்ந்து தான் மேலும் விளக்கங்களைப்பெற சிதம்பரம் குழுவை அனுப்ப இந்தியா தீர்மானித்தது.

சிதம்பரம்குழுகொழும்பில் இருந்து கொண்டு வந்த இலங்கை அரசின் புதிய யோசனைகள் இன்னும் வெளியாக்கப்படவில்லை.

என்ருலும் இந்தியாவின் நிர்ப்பந்தம் காரணமாகவும் நாட்டில்நிலவும் நிலைமை காரணமாகவும் கொழும்பு சமர்ப்பித்த யோசனையில் சிறிது முன்னேற்றம் காணப்பட்டது.

புதிய யோசனைகளின் படி,

மாகாண சபைகளை நிறுவுவதற்காக நாடாளுமன்றத்தில் 3இல்2 பங்கு பெரும்பான்மையுடன் அரசமைப்புச் சட்டம் திருத்தப்படும்.

முதலமைச்சர்கள் தலைமையிலான சபைகளுக்கு நிறைவேற்று அதிகாரங்களும் வழங்கப்படும்.

நிறைவேற்று அதிகாரங்கள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் சட்டத்தின் மூலம் வழங்கப்படும்.

அப்படி வழங்கப்படும் அதிகாரங்களை தன்னிச்சையாக ஜனுதிபதியினுல் ரத்துச் செய்யவோ, திருத்தவோ முடியாது.

மூன்றில் இரண்டுபங்கு பெரும்பான்மையுடன் மட்டுமே நாடாளுமன்றத்தினுல் அந்த நிறைவேற்று அதிகாரங்களை ரத்துச்செய்யலாம்; திருத்தலாம்.

மாகாணத்தில் உள்ள இன விகிதாசாரத்தைக் குழப்பாத விதத்தில் காணிப்பங்கீடு நடத்தப்படவேண்டும் என்ற அடிப்படைக் கொள்கையில் சிறிது முன்னேற்றத்தை கொழும்பின் பிந்திய யோசனைகள் காட்டுகின்றன.

[illegible] குடியமர்த்தக் கூடிய [illegible] புதிதாக உருவாக்கப்படும் மாகாண சபைகளுக்குவழங்கப்படும்.

தேசியத் திட்டங்களின் கீழ் தமிழரும் சிங்களவரும் அவர்கள் விரும்பிய இடங்களில் குடியமர அனுமதிக்கப்படுவர்.

இன்ஞெருமுக்கியபிரச்சினை, உள்நாட்டுச் சட்டம், பாதுகாப்பு.

இன்ஸ்பெக்டர் மட்டத்திலான பொலீஸாரை நியமனஞ் செய்யவும் அவர்கள் மீது பூரண அதிகாரம் செலுத்தவும் மாகாண அரசாங்கங்களுக்கு அதிகாரம் வழங்ககொழும்பு அரசு முன்வந்துள்ளதாக தெரிகிறது.

மாகாணங்களில் உள்ள மத்திய பொலீஸ் படை, ஜனுதிபதியின் நேரடிக் கட்டுப்பாட்டில் இருக்கும்.

மத்திய பொலீஸ் படையில் இருந்து 'கஸெட்டட்' பொலீஸ் அதிகாரிகள் மாகாணங்களுக்கு முதல் அமைச்சர்களின் அனுசரணையுடன் தான் மத்திய அரசினுல் அனுப்பப்படுவர்.

மாகாண அரசுகளின் விருப்பத்தின் பேரிலேயே மத்திய பொலீஸ் படை மாகாணங்களில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட முடியும்.

1985 ஆகஸ்டில் இலங்கை உடன்பட்ட நகல் திட்டயோசனைகளிலும் சுயாட்சி பற்றிய அம்சங்கள் சிறிது காணப்படுகின்றன என்று கருதப்படுகிறது.

காணிக் கொள்கையை மத்திய அரசுக்கும் மாகாண அரசுக்கும் பொதுவான ஒன்ருக வைத்துக் கொள்ள வேண்டும் என்றுதான் [illegible] புதுடில்லி கொண்டு சென்ற [illegible] கூறப்பட்டு இருந்தது

மாகாண அரசுக்குரிய விஷயங்களில் ஒன்ருக காணிக்கொள்கையை விடலாம் என்பது குறித்து சாதகமான கருத்துசிதம்பரம் குழுவிடம் கொடுத்து அனுப்பப்பட்ட யோசனைகளில் காணப்பட்டது.

பெரிய முட்டுக்கட்டையாக இருப்பது வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இணைப்பு.

இணைப்புக்கு எதிர்ப்பு என்ருலும் கல்வி, மொழி, வர்த்தகம், கைத்தொழில் அபிவிருத்தி ஆகிய விஷயங்களில் இரண்டு மாகாணங்களுக்கு இடையே தொடர்பு இருப்பதற்கு ஒத்துக் கொள்வதாக இலங்கை அரசின் பிந்திய யோசனைகளில் கூறப்பட்டிருந்தது.

வடக்கு— கிழக்கு இணைப்பு இல்லாத எந்த ஒரு அரசியல் தீர்வும் ஏற்றுக் கொள்ளப்பட முடியாத ஒன்று என்று தமிழர் அமைப்புக்கள் வலியுறுத்துகின்றன.

அடுத்த பிரச்சினை சுயாட்சித் திட்டத்திற்கு அரசமைப்பு அங்கீகாரம் வழங்க வேண்டும் என்பது.

சுயாட்சித் திட்டத்தின் கீழான நிறைவேற்று அதிகாரங்கள் அரசமைப்புச் சட்டத்தைத் திருத்துவதன் மூலம் வழங்கப்பட வேண்டும்; நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் சட்டத்தின் மூலம் அல்ல, இப்படி தமிழர் விடுதலைக் கூட்டணி விவாதிக்கிறது.

மாகாண சபைகளை அரசமைப்புச் சட்டத் திருத்தம் ஒன்றின் மூலம் நிறுவுவதும்·

அந்த மாகாண சபைகளுக்கான நிறைவேற்று அதிகாரங்களை நாடாளுமன்றத்தில் சட்டம் ஒன்றை நிறைவேற்றுதல் மூலம் வழங்குவதும்—

தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் எண்ணத்தை நிறைவேற்ற உதவுமா? என்பதே கவலைக்குரிய கேள்வியாகும்.

இலங்கை அரசின் பிந்திய யோசனைகளுக்கும் தமிழரின் எதிர்பார்ப்புக்களுக்கும் இடையே உள்ள இடைவெளி கடினமாகத்தான் இருக்கிறது.

இணைப்பு, அரசமைப்பு ஒழுங்கு ஆகிய பிரச்சினைகளை விட காணிக் கொள்கை, சட்டம் ஒழுங்கு ஆகியன தமிழர் அமைப்புக்களின் திருப்திக்கு ஏற்ப தீர்க்கப்பட வேண்டும்.

இந்த அமைப்புக்களுக்கே இவ்விஷயங்கள் திட்டவட்டமாக, பூரணமாக ஒப்படைக்கப்பட வேண்டும் என்பதுதான் தமிழர் அமைப்புக்களின் நிலை. (உ-எ)

# மாணவர் பொறுப்பு

## பவளவிழாவில் வலியுறுத்து

மானிப்பாய், ஜூன். 4

படித்து பட்டம் பெற்று விட்டால் மட்டும் போதாது தாம்படித்த பாடசாலைக்கு பெருமை தேடித் தர வேண்டிய பொறுப்பும் மாணவர்களுக்கு இருக்கின்றது.

மாணவர்களும்பழைய மாணவர்களும் தமது பெற்ற தாயை நேசிப்பது போல பாடசாலைத் தாயை நேசிக்க வேண்டும்.

மானிப்பாய் இந்துக் கல்லூரி பவள விழாவின் முதல் நாள் நிகழ்ச்சியில் விசேடவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. எஸ். தனஞ்செயன் இவ்வாறு கூறிஞர்.

கல்லூரி அதிபர் திரு. எஸ். வி. மகேசவேலு பவளவிழாவுக்கு தலைமை வகித்தார்.

திரு. எஸ். தனஞ்செயன்பவளவிழாமலரை வெளியிட்டு வைத்தார். மானிப்பாய் சுந்தரலிங்க ஸ்தாபனத்தின் அதிபர் திரு. ஜே. சுந்தரசன், பிரமுகர் திரு. இ. வைத்தீஸ்வரன், இலங்கை வங்கி முகாமையாளர் திரு. எஸ். இரத்தினசோதி ஆகியோர் மலரின் முதல் மூன்று பிரதிகளையும் பெற்றுக் கொண்டனர்.

பவளவிழாவை முன்னிட்டு பழைய மாணவர்களால் வெளியிடப்பட்ட மற்ருெரு மலரை பழைய மாணவர் சங்கத் தலைவரும், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீடபேராசிரியருமான டாக்டர் என். சரவணபவானந்தன் வெளியிட்டு வைத்தார்.

இம்மலரின் முதல் இரு பிரதிகளையும் முறையே கே. நாகலிங்கம், திரு. டி. குணராஜசிங்கம் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

இம்மலரை வெளியிட்டு வைத்து உரையாற்றிய டாக்டர் சரவணபவானந்தன் கூறியதாவது:-

நமது நாட்டில் இன்று பலர் அகதிகளாகியுள்


(4 ஆம் பக்கம் பார்க்க)

## கணித விஞ்ஞான கண்காட்சி

மானிப்பாய், ஜூன், 4

மானிப்பாய் கல்வி வட்டாரத்தில் நடைபெறவுள்ள பாடசாலைகளின் கல்விக் கண்காட்சியில் விஞ்ஞான கணித பாடங்கள் போதிக்கும் சகல பாடசாலைகளும் கலந்து கொள்ள வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

நான்காம் ஆண்டு முதல் [illegible] ஆண்டுவரை கட்டாயமாக கல்விக் காட்சிப் பொருள்களை ஒவ்வொரு மானிப்பாய் பாடசாலையும் காட்சிக்கு வைத்தல் வேண்டும் என வட்டாரக் கல்வி அதிகாரி திரு. எஸ். தனஞ்செயன் சுற்று நிருபம் அனுப்பியுள்ளார். (இ-ஓ-90)



**பொய்யாமொழி**

குறள்:

அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமுஞ் செவ்வியான்
கேடும் நினைக்கப்படும்.

பொருள்:

பொருமை பொருந்திய நெஞ்சத்தானுடைய ஆக்கமும் பொருமை இல்லாத நல்லவனுடைய கேடும் ஆராயத்தக்கவை.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வெளிநாட்டுப் பிரயாணம்

* துரித ஒழுங்குகள்
* சலுகைக் கட்டண விமானச் சீட்டுகள்
* Confirmations, Re-confirmations
* பாஸ்போட், விசா, பொன்ட்

நம்பிக்கையைப் பெற்றவர்கள்

Mack Communications & Travels
1ம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம் Tele: 24791, 24836

# உதயன்

04 06-1986 புதன்கிழமை

ரெலிபோன் ரெலெக்ஸ்

24 மணி நேர சேவை
(எல்லா நாட்களும்)
அமைதியான, பாதுகாப்பான இடம்
இரவில் தங்குவதற்கு அறைகள்
நியாயமான கட்டணங்கள்
Safe, Convenient Vehicle Parking
Mack Communications & Travels
1ம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம். Tele: 2479 , 24836

## தீவுப்பகுதியில்—

# 64 பாடசாலைகளுக்கு தற்காலிக விடுமுறை

யாழ்ப்பாணம், ஜூன் 4

ஊர்காவற்றுறை, புங்குடுதீவு வட்டாரத்தின் கீழ் வரும் பாடசாலைகள் தவிர்க்க முடியாத காரணங்களினால் உடனடியாக மூடப்பட்டன. வடமாநில கல்வித் திணைக்களம் இதற்கான உத்தரவை விடுத்திருக்கிறது.

இந்த உத்தரவினால் 64 பாடசாலைகள் தற்காலிகமாக மூடப்படுகின்றன.

மீண்டும் இப் பாடசாலைகள் ஜூன் 16 ஆம் திகதி தான் திறக்கும்.

மூடப்படுவதன் காரணமாக இழந்து போன பாடசாலை நாட்கள் பின்னர் நடத்தப்பட வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான விவரங்களை அதிபர்கள் — வட்டாரக் கல்வி அதிகாரிகள் ஊடாக — மாவட்டக் கல்விப் பணிப்பாளருக்கு அறிவிக்க வேண்டும் என்றும் கேட்கப்பட்டிருக்கிறது.

புங்குடுதீவு வட்டார கொத்தணி பாடசாலை அதிபர்கள் 9-6-86 காலை 9 மணிக்கு வட்டாரக் கல்வி அதிகாரியை அவரின் அலுவலகத்திலும்—

வேலணை பாடசாலை அதிபர்கள் 10-6-86 காலை 9 மணிக்கு வட்டாரக் கல்வி அதிகாரியை அவரின் அலுவலகத்திலும் சந்திக்கும்படி கல்விப் பணிப்பாளரினால் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றனர்.

(உ-எ-5)

## வித்தாரம்

என்ன, முரளித் தம்பி இண்டைக்கு முகம் நல்ல சூரியப் பிரகாசமாய் இருக்கு...?

கோவிலுக்குப் போய் வாறீரோ...

ஓம், ஓம் அதிலே ஒரு வித்தியாசம் இருக்கத்தான் செய்யும். செவ்வாய் என்ன, வெள்ளி என்ன, புதன் என்ன, காலங்காத்தாலே கடவுள் சந்நிதிக்குப் போய் வந்தால் முகத்திலே ஒரு தெளிவு, பூரிப்பு, பிரகாசம் எல்லாம் இருக்கும். உன்னைப் பாக்கவே அது தெரியுதெல்லே.

எங்கடை தமிழன் தெரியாமலே சொன்னவன், 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' எண்டு. தெய்வ சக்திக்கு உள்ள பெரும் மகிமையே மகிமை!

என்னடா இவர் கொண்டோடியார் சமயப் பிரசங்கம் செய்யப் போறுரோ எண்டு நினைக்கிறுயாக்கும்.

நான் இண்டைக்கு உனக்குச் சொல்லப் போற விஷயம் கோயிலைப் பற்றியது. அதுதான் உந்த வித்தாரம் முத்தாய்ப்பு எல்லாம்.

சந்நிதி கோயில், அதுதான் தொண்டமானாறு செல்வச் சந்நிதி கோயில். இப்ப மாதக்கணக்காய் பூசை இல்லாமல் பூட்டிக் கிடக்குது. அதுதானே 'சஞ்சீவி'யிலை போட்டிருக்கினம். "அடியவர்களுக்கு அமைதி தந்த சந்நிதி ஆலயம் ஆளரவம் இன்றி அமைதியானது" எண்டு கட்டுரையாளர் சரியாச் சொல்லியிருந்தார்.

வேல் கொண்டு வினை அறுக்கும் முருகன் உந்த ஆமிக் காம்பை அகற்றுவதற்கு சக்தி இல்லாமல் இருக்கிறுனே எண்டு நண்பர் ஒருவர் ஒருக்கா கவலைப்பட்டார்.

ஆனல் அரசன் தான் அண்டு அறுக்கிறவன்; தெய்வம் அப்படியில்லை. நிண்டு தான் அறுக்கும். அசுரர்களை அழித்த முருகனுக்கு இது பெரிய விஷயமில்லை. அவன் அமைதியின் திருவடிவம் அல்லவா...?

உன்ரை ஆவலையும் என்ன நேரமாய் தூண்டிக் கொண்டிருப்பான் நான் விஷயத்துக்கு வாறனே.

சந்நிதி கோயிலுக்கு ஏற்பட்ட சேதம் அரசாங்கத்தின்ரை கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. அங்கை இருந்து தான் போராளியள் தங்களைத் தாக்கினவை எண்டு காக்கிச் சட்டைக்காரர் சொன்னதும் உண்டு.

எண்டாலும் சேதங்களை ஈடுசெய்ய நஷ்டஈடு குடுக்கிறதுக்கு அதிஉத்தமர் யோசித்ததாகச் செய்தியள் வந்திது.

அதுகளைக் குடுக்கிறதைச் சரியாகத் தீர்மானிக்கிறதுக்கு முன்னுக்கு, சந்நிதி கோயில் தர்மகர்த்தாக்களைச் சந்திக்கவேணும் எண்டு பெரியவர் ஆசைப்பட்டார். ஏதாவது ஒரு பிடி வைக்கவாத்தான் இருக்கும்.

எப்பிடி எண்டாலும் அதுக்கெண்டுஏதோ ஒழுங்குகளும் செய்யப்பட்டனவாம்.

ஆனல் இப்ப திடீரென, கடைசி நேரத்திலை சந்திப்பு ரத்துச் செய்யப்பட்டு விட்டது.

தர்மகர்த்தாக்களைப் பெரியவர் சந்திக்கிற விஷயம் கொழும்பிலை இங்கிலீஷ் பேப்பர் ஒண்டிலை வந்திருந்துதாம்.

அதைக் கண்டவுடன் பெரியவருக்கு பலபக்கத்தாலும் நெருக்குவாரம் வந்திட்டுது —

இஞ்சை கொழும்பிலை அடுத்துத் தொடுத்து குண்டு வெடிப்பு நடக்குது. இப்ப கோயிலுக்கு நஷ்டஈடு குடுக்கிறதோ? அதோ, இதோ? சந்திப்போ, பேச்சுவார்த்தையோ எண்டு பல நெருக்குவாரங்களாம்.

அதன் விளைவுதான் ஆலய தர்மகர்த்தாமாருடன் நடக்க இருந்த சந்திப்பு ரத்தானதுக்குக் காரணம் எண்டு கொண்டோடியாருக்கு ஒரு'சிப்' கிடைச்சுது! வெளியாலை என்னகாரணம் சொல்லுவினமோ யாருக்குத் தெரியும்.

கொண்டோடி

## யாழ்நகரில் நாளை ஆர்ப்பாட்டப் பேரணி

யாழ்ப்பாணம், ஜூன் 4

தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக அரசினல் கட்டவிழ்த்து விடப்பட்ட யுத்தத்தை உடனடியாக நிறுத்துமாறு கோரி நாளை யாழ்நகரில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடைபெறவுள்ளது.

தமிழ் பேசும் மக்கள் ஒடுக்கப்படுவதற்கு எதிரான போராட்டத்திற்கான இணைப்புக் குழுவே இந்தப் பேரணியை ஒழுங்கு செய்துள்ளது.

நாளை காலை 9.30மணியளவில் யாழ்ப்பாணம் நாச்சிமார்கோவிலடியில் ஆரம்பமாகும் இந்தப் பேரணி யாழ் செயலகத்தில் முடிவடையும்.

அனைத்து வெகுஜன அமைப்புக்கள், தொழிற்சங்கங்கள், அரச கூட்டுத்தாபன, கூட்டுறவு, தனியார் துறை ஊழியர்கள் அனைவரும் இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் கலந்துகொண்டு தமது காத்திரமான எதிர்ப்பை வெளிப்படுத்துமாறும் இவ் இணைப்புக்குழு கேட்டுள்ளது.

(உ-10)

## நேற்றும்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் தம்முடன் அழைத்துச் செல்லக்கூடும் என்றும் நகரில் பவத்த வதந்தி அடிபட்டது.

இதன் காரணமாக கோட்டை வங்கி ஊழியர்கள் நேற்று வேலைக்குச் செல்லவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து ஓய்வூதியர்கள் ஓய்வூதியம் பெறுமல் திரும்பிச்சென்றனர்.

(உ - 10)

## செல்வநா... ர...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நாயகம், மாவட்ட அபிவிருத்திச் சபையின் உப்புவெளி உப அலுவலகத்தில் வருமான மேற்பார்வையாளராகப் பணி புரிந்து வந்தார்.

அடையாளங் காணப்பட்டவர்களின் விவரம் வருமாறு;

1 டாக்டர் வை தங்கக்கணபதி (வயது 50)
2 திரு தி. அரியநாயகம்(வயது 50)
3 எஸ். கனகரத்தினம் (வயது 30)
4 நவமலர்(வயது 30)
5 சாலினி (வயது 9) (இவர்கள் மூவரும் கணவன், மனைவி, மகள்)
6 இ. ஸ்ரீஸ்கந்தராசா (வயது 30)
7 எம். சாந்தகுமாரி (வயது 26)
8 எம். சண்முகம் பிள்ளை (வயது 40)
9 வி. கோணேஸ்வரநாதன் (வயது 30)

பத்தாவது சடலம் அடையாளம் காணப்படவில்லை.

(உ-எ-150)

## மாணவர்.;..

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ளனர். சமுதாய விடுதலைக்காக பல இளைஞர்கள் தம் உயிரை அர்ப்பணித்துள்ளனர். இந்த நெருக்கடியான வேளையில் எமக்கு எதையும் தாங்கும் இதயமும், தைரியமும் அவசியம், என்றார்.

(உ —90)

## ஈழவர் முன்னணியும் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 4

நாளை காலை தொழிற்சங்கங்களும், வெகுஜன அமைப்புகளும் ஒன்று சேர்ந்து நடத்த இருக்கும் ஆர்ப்பாட்டப் பேரணியில் தமிழ் மக்களைக் கலந்துகொள்ளும்படி ஈழவர் முன்னணியும் வேண்டுகோள் விடுத்திருக்கிறது

வடக்கு, கிழக்கு மலையகம் உள்ளடக்கிய பகுதிகளில் உச்சக்கட்டத்தையடைந்திருக்கும் அரச பயங்கரவாதத்தைக் கண்டிக்கவும் —

அதனை வெளிக்கொணர்ந்து நேச சக்திகளை வென்றெடுக்கும் கமாகமாகவும் இந்தப் பேரணியில் கலந்துகொள்ளும்படி ஈழவர் முன்னணி அறிக்கை ஒன்றில் கேட்டிருக்கிறது

(உ)

## இணைப்புக்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தித்துப் பேசுவதுடன் —

இனப் பிரச்சினைத் தீர்வுக்கு முட்டுக்கட்டையாக இருக்கும் வடக்கு—கிழக்கு இணைப்பைக் கைவிடுமாறு தமிழர் அமைப்புக்களை நிர்ப்பந்திக்கும்படி பிரதமர் காந்தியை வலியுறுத்திக் கேட்பதுமாகும்.

இப்படி கொழும்பில் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

(உ - எ - 2)

## யாழ்ப்பாண. .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லாகத்தான் உழைக்கின்ளேம்.

மக்கள் மத்தியில் பயங்கரம் குடிகொண்டுள்ளது.

இப்படி ஜனதிபதி சொன்னர்.

(உ - எ - 2)

## தமிழர் வீட்டில கொள்ளை

கொழும்பு, ஜூன் 4

கொழும்பு, மட்டக்குளிப் பகுதியில் தமிழர் ஒருவரின் வீடு திங்கள் இரவு இனந்தெரியாத நபர்களினல் கொள்ளை இடப்பட்டது.

ஆயுதங்களுடன் நுழைந்த இக்கோஷ்டி அங்கு இருந்த மூன்று தமிழ்ப் பெண்களையும் கட்டி வைத்துவிட்டு கொள்ளை இட்டது.

பல்லாயிரக்கணக்கான ரூபா பெறுமதி வாய்ந்த நகைகள், பொருள்கள், டெலிவிஷன் பெட்டி முதலியன கொள்ளை இடப்பட்டன என்று முறையிடப்பட்டுள்ளது.

(உ-எ-2)

## பேரணிக்கு ஆதரவாக கூட்டுறவுஸ்தாபனங்களை மூடுவதற்கு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 4

கூட்டுறவுத் ஸ்தாபனங்களை நாளையதினம் மூடி நாளை நடைபெறும் ஆர்ப்பாட்டப் பேரணியில் பங்கு பற்றுவதற்காக காலையில் நாச்சிமார் கோவிலடியில் வந்துகூடுமாறு கூட்டுறவுத்துறை ஊழியர்களுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாணம் கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கத்தின் தலைவர் திரு. இரா. லோகநாதன், தேசிய கூட்டுறவுச் சபையின் தலைவர் திரு. சி. சிவமகாராசா ஆகியோர் இணைந்து இந்தக் கோரிக்கையை விடுத்திருக்கிறார்கள்

அரசின் திட்டமிட்ட இன ஒழிப்பு நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் இந்தப் பேரணியில் கலந்து கொள்ளும்படியும் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது

(உ)

## ஓடும் ரயிலில்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

துக்கு ரயில்வந்து நிற்கும் வரை இத்தாக்குதல் நீடித்தது.

தமிழ்ப் பயணிகளின் உடைமைகள், பொருள்கள் கொள்ளை அடிக்கப்பட்டன.

கெக்கிராவை ரயில் நிலையத்தில் வைத்துப் பாதுகாப்பு அதிகாரிகள் தாக்குதலைத் தடுத்து நிறுத்தினராம்.

இத்தாக்குதலினல் ஆகக் குறைந்தது 7 தமிழ்ப் பயணிகள் உயிரிழந்தனர் என்று அஞ்சப்படுகின்றது. 20 பேர் வரை காயமடைந்தனர். எல்லாரும் தமிழர்

இரண்டு தமிழ்ப் பயணிகளின் சடலங்களைக் கண்டதாக அப்பகுதியில் உள்ள ஒருவர் தெரிவித்தார்

இறந்தவர்களில் ஒருவர் மூதூர் கட்டைபறிச்சானைச் சேர்ந்த கோபால பிள்ளை சந்திரசேகரம் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

### எதிரொலி

திருகோணமலையைச் சேர்ந்த கணவன், மனைவி, மகன் ஆகிய ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் மாகோ ஆஸ்பத்திரியில் படுகாயங்களுடன் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அனுராதபுரம் ஆஸ்பத்திரியிலும் மூன்று பயணிகள் படுகாயங்களுடன் அனுமதிக்கப்பட்டு உள்ளனர்

வியாங்கொட ரயில் குண்டுவெடிப்புச் சம்பவத்தில் இறந்த ஒரு சிங்களவர் கெக்கிராவையைச் சேர்ந்தவர் என்றும்—

அவரது சடலம் நேற்றுத்தான் கெக்கிராவைக்குக் கொண்டுவரப்பட்டதாகவும் கூறப்படுகிறது

அதன் எதிரொலிதான் நேற்று நடந்த தாக்குதல் என்று சொல்லப்படுகிறது.

(அ—எ—21)

## சிலிண்டர் குண்டு---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

போது நாவற்குழி முகாமைத் தாண்டிப் போக முயற்சித்த சில பொது மக்கள் சிருடையினரால் தடுத்து வைக்கப்பட்டனர். எனினும் அவர்கள் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் பற்றி அறிய வருவதாவது:-

நேற்றுக் காலை ஏழு மணியளவில் நாவற்குழி இராணுவ முகாமிற்கு அருகாமையில் கண்டி வீதியில் போடப்பட்டிருந்த வீதித் தடையை நீக்குவதற்காக பத்துக்கும் மேற்பட்ட சிப்பாய்கள் நடந்து வந்தனர்.

அப்பொழுது வீதித் தடையருகே உள்ள பத்தைக்குள் சிலிண்டர் குண்டுகள் இருப்பதைக் கண்டு அவர்கள் பின்வாங்கிச் சென்றதாகக் கூறப்படுகிறது.

மீண்டும் வயல் வெளிப் பாதைகள், கடல் பாதைகள் ஊடாக அப்பகுதிக்கு வந்த சீருடையினர் அங்கிருந்த சிலிண்டர் குண்டுகளை மீட்டெடுத்ததாகச் சொல்லப்படுகிறது.

இந்தச் சந்தர்ப்பத்தில் போராளிகள் கைக்குண்டுகளை வெடிக்க வைத்ததாகக் கூறப்படுகிறது.

பின்னர் முகாமிற்கு திரும்பிய சிப்பாய்கள் அரியாலைப் பகுதியை நோக்கி 15 க்கும் மேற்பட்ட 'ஷெல்' குண்டுகளை ஏவினர்.

சில குண்டுகள் அரியாலைப் பகுதியிலும், வயல் வெளிகளிலும் விழுந்து வெடித்தன.

ஜோசப் இராஜன் (24 வயது) என்ற இளைஞர் காயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

அரியாலைப் பகுதியில் வீட்டு வளவுக்குள் 'ஷெல்' விழுந்ததினல் வீடு ஒன்று சேதமடைந்தது.

இந்தச் சம்பவங்களை அடுத்து நாவற்குழி வீதித்தடைக்கு அருகில் உள்ள பல பற்றைகள், மரங்கள் பெற்றேல் ஊற்றிக் கொளுத்தப்பட்டதாகவும் தெரிய வருகிறது.

(உ-10-74)

## 10 தமிழரின் . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முகாமை விட்டுச் சென்றுவிடுவர்

திங்கள் நண்பகல் 1.30 மணியளவில் அச்சந்தியினூல் போன தமிழர்கள் சிப்பாய்கள் சிலரினல் தடுத்து விசாரணை செய்யப்பட்டனர். சிலர் விடுவிக்கப்பட்டனர். சிலர் தடுத்து வைக்கப்பட்டனர்.

இப்படித் தடுக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டதாகக் கூறப்படுபவர்களின் சடலங்களே நேற்று துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் கண்டு எடுக்கப்பட்டன.

இறந்தவர்களில் ஒருவர் பாடசாலை மாணவி. அவரின் சடலம் "யூனிபோம்" உடையுடன் காணப்பட்டது.

மூவரின் சடலங்கள், பகலில் முகாமாகப் பாவிக்கப்படும் கட்டடத்தின் பின்னல் உள்ள மலசலகூடக் குழிக்குள் கண்டுபிடிக்கப்பட்டன

ஏனைய சடலங்கள் அருகில் உள்ள வளவுகளில் உள்ள மலசலகூடக்குழிகளுக்குள் கிடக்கக் கண்டு எடுக்கப்பட்டன.

இப்பகுதியில் வாளி மலசலகூடங்களே பாவனையில் உண்டு.

கொலையுண்டவர்களில் ஒன்பது பேரின் சடலங்கள் திருமலை ஆஸ்பத்திரியில் வைத்து அடையாளங் காணப்பட்டன. 10 ஆவது நபரின் சடலம் அடையாளங் காணப்படவில்லை. அவர் ஒரு முஸ்லிமாக இருக்கலாம் என்று கூறப்பட்டது

பிரேத பரிசோதனைகள் நடத்தப்பட்ட பின்னர் சடலங்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

இச் சம்பவத்தில் தப்பிய நபரான பாஸ்கரன் என்பவர் தெரிவித்த தகவலைத் தொடர்ந்தே, சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

(அ - எ - 150)

## 8 தமிழ்கைதி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கிறது. நேற்று வரை 60பேர் உண்ணுவிரதப் போராட்டத்தில் குதித்திருப்பதாக கொழும்பில் நம்பகரமான வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன

மதியழகன், மகேஸ்வரன், சலீம், நகுலேந்திரன், நாகேஸ்வரன், கரவெட்டியைச் சேர்ந்த வரதன், யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியைச் சேர்ந்தவர்களான ஸ்ரீதரன், சத்தியமூர்த்தி ஆகிய எட்டுப் பேரின் நிலையே கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது

(உ)

## ...க்ஸிற...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

றிய விவரங்களைத் தெரிவித்தார்.

அச்சமயம் திரு.ஜெயவர்த்தனவின் நீண்ட கடிதத்தை திரு. டிக்ஸித் பிரதமரிடம் கையளித்தார். அக்கடிதமே வெளியுறவு அமைச்சர் சிவ்சங்கர் தலைமையிலான உயர் மட்டக் குழுவினல் பரிசீலிக்கப்பட்டு வருகின்றது.

கடிதத்தின் உள்ளடக்கம் வெளியிடப்படவில்லை.

வெளியுறவு ஆலோசனைக் கமிட்டித் தலைவர் திரு. ஜி பார்த்தசாரதி, வெளியுறவுச் செயலாளர் திரு. ஏ. பி. வெங்கடேஸ்வரன், முன்னள் வெளியுறவுச் செயலாளர் ரொமேஷ் பண்டாரி, இணை அமைச்சர் சிதம்பரம் ஆகியோர் அந்த உயர்மட்டக் குழுவில் உள்ளனர்.

(உ-எ-2)

## தர்மகர்த்தா---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரத்துச் செய்துவிட்டார்

செல்வச் சந்நிதி ஆலயத்துக்கு ஏற்பட்ட சேதங்கள், அதனல் ஆலயம் மூடப்பட்டுள்ள நிலை குறித்து ஜனதிபதியுடன் பேசுவதற்கு அரசாங்க அதிபர் ஊடாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

அச்சந்திப்பையே ஜனதிபதி திடீரென்று ரத்துச் செய்து விட்டார்.

ROCK Engineers & Contractors

IN

TUBE WELLS, PLUMBING, FITTINGS, TANKS & BUILDINGS WORKS

குழாய்க் கிணறுகள்

உங்கள் பூமி மணற்கண்டமாக இருந்தாலென்ன, களிக்கண்டமாக இருந்தாலென்ன, கற்கண்டமாக இருந்தாலென்ன சிறந்த நீர்வள ஆராய்ச்சியுடன், நவீன இயந்திரங்கள் மூலம், குழாய்க்கிணறுகள் எங்களால் அமைத்துத் தரப்படும்.

உங்கள் தேவைகள் வீட்டுத் தேவையாகவும் இருக்கலாம்.

பெரிய அளவிலான பயிர்ச் செய்கையாகவும் இருக்கலாம்.

றெக் எஞ்ஜினியர்ஸ்

பருத்தித்துறை வீதி, கோப்பாய்

LONDON EXAMS
NOV. / DEC. 86
WEEKEND CLASSES

| | | | |
|---|---|---|---|
| I.A.B. | Foun | 7.6 86 | 200/- |
| | Inter | 7.6 86 | 250/- |
| | Final | 7-6,86 | 300/- |
| I.A.A. | Part I Monthly | | 200/- |
| I.C.M.A. | Section A | 14.6 86 | 600/- |
| | B | 14.6 86 | 300/- |

The College of Degree Studies
148/1, STANLEY ROAD,
JAFFNA.

## மரண அறிவித்தல்

### தி பிரதீபன்

பிறப்பு:- 29-05-64 இறப்பு:- 03-06-86

யாழ்ப்பாணம் நக்கா ஒழுங்கையைச் சேர்ந்த திருநாவுக்கரசு பிரதீபன் அகால மரணமானர். இவர் திருநாவுக்கரசு, செல்வராணி தம்பதிகளின் (கனடா) அன்பு மகனும், பிரபாகரன், குமுதினி, மனேரஞ்சன், நரேஷ்குமார் ஆகியோரின் அருமை சகோதரனும், ரெஜினு தேவசகாயத்தின் பேரனுமாவார். அன்னரின் நல்லடக்கம் இன்று (04-06 86) மாலை 4.00மணியளவில் கொஞ்சேஞ்சு மாதா சேமக்காலையில் நடைபெறுவதற்காக இல.7 நக்கா ஒழுங்கையிலிருந்து எடுத்துச் செல்லப்படும். உற்ருர், உறவினர் இந்த அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்,

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை, ... உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 4 - 06 - 1986
Printed and Published by Uthayan Publications (Private) Ltd. 1st Second Lane, Power House Road, Jaffna. Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under number Q J 60 Web

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org